தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2025) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் சந்தித்து, பொங்கல் திருநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சந்தானம் உள்ளார்.







முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக முதல் 10 தொகுதிகளை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ.அரசு, பேராசிரியர் முனைவர் மு.வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர் அ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர் நலத்துறை சார்பில்

# ரூ.27.33 கோடியில் அலுவலகக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 14-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ.27.33 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், அரசினர் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.01.2025) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம் வி.மருதூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் பட்டணம் காத்தான் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக்கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம், என மொத்தம் 27 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலத்துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாக, பரந்த மற்றும் பன்முகத் தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியை பெருக்குதல், தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை உறுதி செய்தல், துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திவருகிறது.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், ஈமச்சடங்கு போன்ற பல்வேறு நல உதவிகளை 20 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

**ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள்**

விழுப்புரம் மாவட்டம், வி.மருதூர் கிராமத்தில் தரை மற்றும் முதல் தளத்துடன், 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் கிராமத்தில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 4 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இவ்வளாகத்தில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களான தொழிலாளர் துணை ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர், முத்திரை ஆய்வாளர் அலுவலகங்கள் அமையப் பெற்றுள்ளன. இதன் மூலம், பொது மக்கள், தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களை அளிக்கவும், 20 உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தங்களுடைய பதிவை புதுப்பிக்கவும், புதிதாக பதிவு செய்யவும், பணப் பயன்களைப் பெறவும் இயலும்.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறன் அதிகரிக்கும். இத்தகைய தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கிட புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை தொடங்குதல், அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய தொழிற் பிரிவுகளை தொடங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம் - விராலிமலையில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்கள் தங்கும் விடுதிக்கட்டடம்;

சென்னை மாவட்டம் - வண்ணாரப்பேட்டை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 3 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழிற் பிரிவுகளுக்கான கட்டடம்;

தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாட்டில் 4 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்;

சேலத்தில் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் - தேன்கனிக்கோட்டையில் 8 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம்;

என மொத்தம் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் (மு.கூ.பொ.) முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீரராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை**

பூ.து.ந.க.எண்.பி2 / 047 / 2025

**ஒற்றை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 1, முதல் 15 வரை உள்ள இடங்களில் மரங்கள் மற்றும் செடிகள் நட்டு 1000 எண்ணிக்கையிலான வேலிகள் (Tree Guards) அமைக்கும் பணி (Single Cover System)**

**பணியின் மதிப்பு ரூ.30.59 இலட்சங்கள்**
முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **27.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **28.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 184 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**




சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி சார்பில் தூங்காத உழைப்பு துணை முதல்வர் சிறப்பு பாடகர்கள் இன்னிசை அரங்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி (12.01.2025) அன்று நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ இன்னிசையை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பகுதி செயலாளர் அ.முருகன், க.ஜெயராமன், வ.பெ.சுரேஷ், செந்தில்குமார், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வீ.தயாளன், அ.ஜியாவுதீன், இரா.லீலா வேலு, எம்.லதா, அ.செந்தூர்பாண்டியன், கே.இ.செந்தமிழ் அரசு, சி.எஸ்.ரவி, கே.வி.ராஜன், என்.கார்த்திபன், எம்.உமாபதி, இரா.ஹரிதாஸ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளையொட்டி

# தமிழ்நாடு காவல்துறையினர் 3186 பேருக்கு பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

**சென்னை, ஜன. 14- 2025 பொங்கல் திருநாளையொட்டி 3186 தமிழ்நாடு காவல் துறை மற்றும் சீருடை அலுவலர்கள்/பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர் நிலை2, காவலர் நிலை1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3000 பணியாளர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர், இயந்திர கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 120 அலுவலர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் (ஆண்), இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (பெண்) நிலைகளில் 60 பேர்களுக்கும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலைவேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400/, 2025 பிப்ரவரி 1ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப் பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் வீதம், மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும்.

மேற்கண்ட அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு பதக்க அணிவகுப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – நா.எழிலன் – வினோத் வேலாயுதம் பங்கேற்பு!

# 112வது வட்ட தி.மு.க. சார்பில் பொங்கல் விழா!

## வட்டச் செயலாளர் வரதை த.பரி அறிக்கை!

*சென்னை, ஜன.14*

*வட்டச் செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :*

*சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 112வது வட்டக் கிளை சார்பில் பொங்கல் விழா வட்ட செயலாளர் வரதை த. பரி தலைமையில் இன்று (14.01.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணி அளவில் டிரஸ்டுபுரம் 6-வது தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.*

*பொங்கலிட்டு பொங்கல் மற்றும் இனிப்பு வழங்குபவர் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்ட பொருளாளர் ஜெ. எஸ். அகஸ்டின் பாபு, பொதுக்குழு உறுப்பினர் ஜோஷ் டேனியல், ஆதி திராவிடர் அணி எம்.ஏ.ஜஸ்டின், பகுதி அவைத் தலைவர் புவி. பாலாஜி, பகுதி துணை செயலாளர் என்.பி.இதயத் பாஷா, எலிசபெத் அகஸ்டின் எம்.சி., மாவட்ட பிரதிநிதி பார்த்திபன், த.ஜசென்ட், வட்ட நிர்வாகிகள் எஸ்.மனோகரன், வி. பொன்சீலன், வி.ராஜி, எச்.சக்கரவர்த்தி, எல்.முருகன், பி. பாலாஜி, பி.சிவா, ஏ.ஜான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, பாகத் தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*இவ்வாறு வட்ட செயலாளர் வரதை த.பரி அறிக்கை விடுத்துள்ளார்.*

### சிவகங்கை மாவட்ட கலைஞர் தொலைக்காட்சி

# செய்தியாளர் ஆர்.ஜகன்நாத் தந்தை மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சிவகங்கை, ஜன. 14 - சிவகங்கை மாவட்ட கலைஞர் தொலைக்காட்சி செய்தியாளர் ஆர். ஜகன்நாத் தந்தை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*சிவகங்கை மாவட்ட கலைஞர் தொலைக்காட்சி செய்தியாளர் ஆர் ஜகன்நாத் .அவர் சகோதரர் ஆர். ராம்நாத் ஆகியோரின் தந்தை ராஜாராம் (வயது 83) நேற்று முன்தினம் இரவு சிவகங்கையில் மறைவெய்தினார்.*

*இவருக்கு மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் உள்ளார்கள் .*

*மறைந்த ராஜாராம் உடலுக்கு சிவகங்கை நகர் கழக செயலாளர்சி.எம்.துரை. ஆனந்த், காளையார் கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர்ஆர்.எம். கென்னடி மற்றும் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள், பிரமுகர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள் . நேற்று மாலை ராஜாராம் இறுதி சடங்குகள் நடைபெற்றது.*

# "விருது" நகர் ஆனதே!

சங்ககாலம் மீண்டு
சமகாலம் ஆனதோ?
சங்ககால மன்னர்தான்
சமகால ஸ்டாலினோ?

சேரசோழ பாண்டியர்
சேர்ந்துவந்த காட்சியோ?
தீரமிகு ஸ்டாலின்
திராவிடமாடல் ஆட்சியோ?

அறிஞர்களைக் கவிஞர்களை
அழைத்தழைத்துச் சிறப்பிக்கும்
அறிவார்ந்த முதல்வரை
அருந்தமிழின் புதல்வரைப்

பெற்ற தமிழ்நாடு
பேறுபெற்ற பெரும் பீடு.
வெற்றி நாயகனின்
வீரார்ந்த திருநாடு.

பாடினால் பரிசுதரும்
பைந்தமிழர் மரபினிலே
ஆடினால் பரிசுதரும்
அருந்தமிழர் வழியிலே

தேடித்தேடி விருதுதரும்
திராவிடப் பேரரசே
நாடியுனைப் போற்றுவது
நல்லோரின் நன்றியன்றோ?

விருதுகளை நாள்தோறும்
விரும்பிவேண்டி அளிப்பதால்
"விருது"நகர் ஆனதே
வெற்றிநகர் தமிழ்நாடு.

பல்லாண்டு பல்லாண்டு
பைந்தமிழ் முதல்வராய்
நல்லாட்சி தருகவே
நம்ஆட்சித் தொடர்கவே.

விருதுபெறும் சான்றோர்
விரும்பியுனை வாழ்த்துகிறோம்.
விருதுதரும் நீதான்
விருதுஇந்தப் பூமிக்கே!

**கவிஞர்**
**பொன் செல்வகணபதி**



திருவள்ளூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு கூட்டரங்கம் கட்டடம் கட்டும் பணியினை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து மாற்றுத்திறனாளி நலன் சார்பில் 226 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.50,53,810 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபுசங்கர் திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. இராஜ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார், பொதுப்பணித்துறை (கட்டடம்) செயற்பொறியாளர் தேவன். மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வெங்கட்ராமன் மற்றும் அரச அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.